மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தனிப் பட்ட வகையில் அதுபோல அரசுக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. தெரிவிக்கப்பட்டு இருக்குமேயானால், இதுபற்றி உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, ஏதோ இந்த வைரஸ் நோய் ஒரு பகுதியில் ஏற்பட் டிருப்பதாகக் கூறினார்கள். ஆனால் மாநில அளவில் எங்கெங்கே ஏற்பட்டிருக்கிறது என்கின்ற தகவல் அமைச்சரவர்களுக்கு அதிகாரி கள் கொடுக்கவில்லையென்றுதான் தோன்றுகிறது. என் மாவட்டத் திலும் ஆங்காங்கே பரவலாக இருக்கிறது என்று அந்த அதிகாரிகளே கூறுகிறார்கள். அதைப் போக்குவதற்கு அரசாங்கம் நிரந்தரமாக ஒரு உத்தரவை இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அப்படிப் பல்வேறு பகுதிகளில் இருப்பதைத்தான் நான் "பல்வேறு" என்று குறிப்பிட்டேன். அவைகள் தனியாக எந்தெந்தப் பகுதி என்று கேட்பார்களேயானால் அவைகளைப்பற்றித் தனியாக ஒரு கேள்வி போடுவார்களேயானால், விவரங்களைத் தெரிவிக்கிறேன்.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, இந்தச் சப் போஸ்டா வாழை பயிர் செய்வதால் இப்படிப்பட்ட நோய்கள் தடுக்கப்படுமென்று அதிகாரிகள் சொல்லுகின்றார்கள். அதனுடைய மாலை கன்னுடைய விலைகள் அதிகமாக இருக்கின்றன. ஒரு பாதி அளவில் சலுகை செய்து அதை விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் கம்பம் பகுதியில் பச்சைய குலை நோய் என்று ஒரு நோய் காணப்பட்டது. அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றது. அவர்களுக்கு வேண்டிய பல்வேறு உதவிகளைத் தான் செய்துவருகிறோமே தவிர, அதற்குத் தனி மானியம் எதுவும் வழங்கப்படவில்லை.

Construction of Prefabricated Houses

*320 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the State Government had any discussion with the officials of the Hindustan Housing Factory about the construction of Prefabricated houses during December 1972; and

(*b*) if so, the details thereof?

1973 மார்ச் 31]

முன்னரே தயாரிக்கப்பட்ட நிலையில் உள்ள வீடுகளைக் கட்டுதல்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முன்னரே தயாரிக்கப்பட்ட நிலையில் உள்ள வீடுகளைக் கட்டுவது குறித்து, ஹிந்துஸ்தான் வீட்டு வசதித் தொழிற்சாலை அதிகாரிகளுடன், 1972-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், மாநில அரசு, பேச்சு வார்த்தை ஏதும் நடத்தியதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

THE HON. THIRU K. RAJARAM : (a) Yes.

(b) The question of setting up of prefabricated Housing Factory in Madras, was discussed recently with the officials of the Hindustan Housing Factory, New Delhi. It was decided to have a feasibility report on the project in the First instance. The Managing Director of Hindustan Housing Factory, New Delhi, has promised to send a feasibility report for the setting up of a prefabricated Housing Factory near Madras. Certain particulars required by the Managing Director, Hindustan Housing Factory, New Delhi, are being collected from various Government departments engaged in building activities to enable him to send a feasibility report in the matter.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, இந்த மாதிரி வீடுகள் கட்டினுல் உறுதியாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, வீடுகள் வேகமாகக் கட்டுவதற்கு தற்போது மேல்நாடுகளில் இந்த முறையைக் கையாளுகிறுர்கள். தற்போது வீட்டுவசதி வாரியம் படிப்படியாக இந்த முறையில் வீடு கட்டுகின்ற திட்டத்தைக் கையாண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : What would be the cost per square foot for such houses, Sir.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அனேகமாக கன்வென்ஷனல் டைப் வீடுகளுக்கு ஆகும் செலவில் பாதி அளவுக்குத் தான் இந்த பிரி-பேப்ரிகேடட் வீடுகளுக்குச் செலவு இருக்கும்.

திரு. வி. வெங்கா : இந்த முறையில் கட்டப்பட்ட வீட்டின் அடக்கவிலை என்னவாக இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : எத்தனை சதுர அடி என்பதைப் பொறுத்து ஒரு வீட்டின் விலை இருக்கும். கட்டப்படுகின்ற வீட்டின் அளவைப் பொறுத்தது. இப்பொழுது 220 சதுர அடியில் ஒரு மாதிரி வீட்டை கிராமங்களில் கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட வீடொன்று நேற்று கதிர்வேடு கிராமத்தில் திறந்து வைக்கப்பட்டது. இதன் விலை ரூ. 2,800.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, இந்த "பிரி-ஃபேப்ரிகேடட்" வீடுகளைக் கட்டுவதால் நமது நாட்டில் வேலைவாய்ப்புகள் பாதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, வீட்டிற்குத் தேவை இப்போது அதிகமாக இருக்கிற காரணத்தால் இந்த மாதிரி வீடுகளைக் கட்டுகிறோம். இதனால் வேலை வாய்ப்பு அவ்வளவாக பாதிக்கப்படாது. கன்வென்ஷனல் வீடுகளைக் கட்டுவதற்குத் தேவைப் படும் ஆட்களை விட குறைவாக ஆட்கள் இருந்தால் போதும். இந்தத் திட்டத்தின் மூலமும் வேலைகள் கிடைக்கின்றன. வேலைவாய்ப்பற்ற தன்மை ஏற்படுத்தப்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்த முறையில் சிக்கனமாக ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டித் தரலாம் என்ற முயற்சியைப் பாராட்டுகிறேன். இதைப் போன்ற வீடுகளை மாவட்ட வாரியாக வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கிராமங்களில் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழ் நாட்டில் 50 ஆயிரம் வீடுகள் கட்டப்பட இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் 10 வீடுகள் கட்டலாம் என்ற முறையில் 5 ஆயிரம் கிராமங்களில் வீடுகளைக் கட்ட அரசு ஆலோசித்திருக்கிறது. அதற்கான முறையில் மலிவு வீடுகளைக் கட்டுகின்ற முயற்சியை எடுத்துக்கொள்ளும்.

TRUTH ALONE TRIUMPHS